APPENDIX IV.

STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE ON PLAN SCHEMES OF TAMIL NADU UNDER THE FOURTH FIVE-YEAR PLAN.

Heads of Development.	Fourth Five-year Plan Provision (Tentative) 1969–70 to 1973–74.	Budget Estimate, 1969–70.	Revised Estimate, 1969–70.	Budget Estimate, 1970–71.
(1)	(2)	(3)	(4)	(5)
		(RUPEES IN LAKHS.)		
I. Agricultural and Allied Programmes—				
1 Agricultural Production	30,15	3,92	3,25	3,03
2 Minor Irrigation	25,56	6.11	5.85	4,99
3 Soil Conservation	5,43	60	58	60
4 Ayacut Development Programme ..	27	61	43	54
5 Animal Husbandry	8,14	58	38	32
6 Dairying and Milk supply	5,34	72	54	45
7 Forest	4,73	58	56	62
8 Cinchona	56	10	4	16
9 Fisheries	10,09	1.30	1,41	1,37
10 Warehousing and Marketing ..	79	6	6	11
Total—I ..	91,06	14,58	13.10	12,19
II. Co-operation and Community Development—				
1 Co-operation	28,72	77	1,19	1,24
2 Community Development and Rural Development Programmes ..	11,54	2,20	2,07	2,29
Total—II ..	40,26	2,97	3,26	3,53
III. Irrigation and Power—				
1 Irrigation and Flood Control ..	39,06	4,50	4,57	4,98
2 Power	1,69,79	36,88	46.20	43,53
Total—III ..	2,08,85	41,38	50.77	48,51
IV. Industry and Mining—				
1 Large and Medium Industries ..	32,05	4,00	1,42	3,92
2 Mineral Development	1.04	12	12	10
3 Village and Small Industries ..	31.00	3,31	3,08	3,60
Total —IV ..	64,09	7,43	4,62	7,62

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1970 பிப்ரவரி 261

Heads of Development.	Fourth Five year Plan Provision (Tentative), 1969–70 to 1973–74.	Budget Estimate, 1969–70.	Revised, Estimate, 1969–70.	Budget Estimate, 1970–71.
(1)	(2)	(3)	(4)	(5)
		(RS. IN LAKHS.)		
V. Transport and Communications—				
1 Roads	25,04	1,81	1,61	2,53
2 Road Transport	7,29	99	1,14	1.38
3 Inland Waterways	..	..	..	..
4 Ports and Harbours	..	..	..	..
5 Tourism	26	1	5	3
Total—V. ..	32,59	2,81	2,80	3,94
VI. Social Services—				
1 General Education	53,17	4,20	3.99	6,35
2 Technical Education	6.59	1,08	1,14	93
3 Cultural Programmes	61	8	5	10
4 Health and Family Planning ..	17.32	2,20	1,89	2,43
5 Water-supply and Sanitation ..	55.12	3,97	3,85	11,16
6 Housing	30.30	4,48	4,30	4,78
7 Town Planning and Urban Development.	2.24	12	26	29
8 Welfare of Backward Classes ..	10·09	1,01	2,23	2,54
9 Social Welfare	1,32	18	11	17
10 Craftsmen Training and Labour Welfare	2.39	23	18	21
11 Public Co-operation	8	1	1	1,01
Total—VI ..	1,79,23	17,56	18,01	29,97
VII. Miscellaneous—				
1 Statistics	59	2	2	8
2 Hill Areas Development Programme.	7.00	45	27	41
Total—VII ..	7,59	47	29	49
GRAND TOTAL ..	6,23,67	87,20	92,85	1,06,25

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்--விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

காவல் துறை

*** 129 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் போலீஸ் படையின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தற்போது எதுவும் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் சட்டம்-ஒழுங்குப் பிரிவு, குற்றப் பிரிவு என்று இருப்பதைப்போல், மதுவிலக்கை அமல்படுத்த மதுவிலக்குப் பிரிவு ஒன்றினை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுபற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி: சார், சென்ற அரசாங்கம் இருந்தபோது எஸ்டிமேட் கமிட்டியினுடைய ரிபோர்ட்டில் போலீசினுடைய எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்று ஒரு சிபார்சு இருந்தது. நீண்ட நாட்களுக்கு முன்பு ஜனத்தொகை அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை போடப்பட்டது. இப்பொழுது ஜனத்தொகை அதிகரித்திருப்பதால், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்குப் போலீசாருக்கு மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, போலீசாரின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்று குழு பரிந்துரைத்திருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலித்து ஒரு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: போலீஸ் படையினுடைய எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்பதைப்பற்றி யோசிக்கும் அதே நேரத்தில் நம்முடைய நிதி நிலைமையையும் எண்ணிப்

பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அதையும் எண்ணிப் பார்த்து இதுபற்றி அரசாங்கம் தக்கதொரு முடிவை உரிய நோத்தில் எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கைதிகளை அழைத்துச் செல்வதற்கும், பெண் கைதிகளை விசாரணை செய்வதற்கும், பெண் போலீஸ் படை அமைக்க வேண்டும் என்று ஒரு திட்டம் இருந்ததே, அது இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ? அல்லது பரிசீலிக்கப் பட்டு கைவிடப்பட்டதா ? பரிட்சார்த்தமாக அதைச் செயல் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரீட்சார்த்தமாகச் செயல் படுத்த அரசுக்கு இப்பொழுது எந்த உத்தேசமும் இல்லை.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் நீண்ட நெடுங்காலமாக, முஸ்லீம்களைச் சேர்ப்பது என்பது இல்லாத நிலை இருந்து வருகிற காரணத்தால் புதிய நிய மனங்களில் முஸ்லிம்களுக்கு இடம் தர அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காவல் துறையில் முஸ்லீம் களும் இருக்கிறார்கள்.

* 130 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a special officer was appointed to go into the demands of the Ministerial staff association of the Tamil Nadu Police Department;

(*b*) whether he submitted his report;

(*c*) what his recommendations are; and

(*d*) whether the Government propose to implement his recommendations?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) மாவட்டக் காவல் துறை அலுவலகங்கள், சென்னை மாநகரக் காவல் துறை அலுவலகம் ஆகியவற்றின் அமைப்புபற்றி ஆய்வுசெய்து அவற்றின் மேம் பாட்டிற்கான கருத்துரை நல்குவதற்கென சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

(இ) ஆம்.

(உ) & (எ) பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. கே. விநயகம் : சார், இந்த விஷயத்தைப் பொறுத்தவரை யிலும், இதுபற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனி அதிகாரி போட்டார்கள் என்று சொல்லப்படுகிற இந்த நோத்தில், யாராவது சட்டசபை அங்கத்தினர்கூட இந்தக் குழுவில் சேர்ந்து இதை விசாரித்தார்களா? அதற்கென்று வேறு ஏதாவது ஸ்தாபனம்

---

* 249–260ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.